# மெட்ரோ ரயில்களில் கல்விச் சுற்றுலா: நவம்பரில் 3,028 மாணவர்கள் பயணம்

சென்னை, டிச. 1: மெட்ரோ ரயில்களில் நவம்பர் மாதத்தில் மட்டும் 3,028 மாணவர்கள் கல்விச் சுற்றுலா மேற்கொண்டனர்.

சென்னை நகரில் மெட்ரோ ரயில் தொடர்பாக அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சியாக மாதந்தோறும் கல்விச் சுற்றுலாவுக்கு சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

அதன்படி, சென்ட்ரலில் இருந்து விமானநிலையம் வரையும், ஏஜி டி.எம்.எஸ். முதல் விமான நிலையம் வரையும் கல்விச் சுற்றுலாவை மாணவ, மாணவிகள் மேற்கொள்ளலாம். இதில், மெட்ரோ ரயிலின் சிறப்பு அம்சங்கள் பற்றி விளக்கப்படுகின்றன.

இந்நிலையில், 2018-2019-ஆம் கல்வியாண்டில் கல்விச் சுற்றுலா மேற்கொள்ள அரசு, மாநகராட்சி பள்ளி மாணவ மாணவிகளுக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, கடந்த நவம்பர் மாதத்தில் மட்டும் 3,028 மாணவ, மாணவிகள் மெட்ரோ ரயில்களில் பயணம் செய்து பயனடைந்துள்ளனர். நிகழாண்டில் ஜூன் 21-ஆம் தேதி முதல் நவம்பர் வரை மெட்ரோ ரயில்களில் அரசு, மாநகராட்சி பள்ளிகளைச் சேர்ந்த 21,449 மாணவ, மாணவிகள் பயணம் செய்துள்ளனர்.

இந்தத் தகவலை மெட்ரோ ரயில்வே நிர்வாகம் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.